

திக்குத் தெரியாத
தீவில்..!
லயன்
காமிக்ஸ்




# திக்குத் தெரியாத தீவில்...!


நோ...என் உயிர் உள்ளவரை அது நடக்காது!
பரலோகம் போக அவ்வளவு ஆசையா!


அப்பொழுது-
வாட் ..ஆ ஆ ஆ !
டுமீல்!
எத்தனுக்கு எத்தன
நாங்கள்!
இந்த வைரங்கள் அனைத்தும்
எங்களுக்கே சொந்தம்!


மரியாதையாக எல்லோ
ரும் அந்த அறையினுள்
போங்கள்...
டேய்...சோமாறிகளா—
நீங்களும்தான்!


வா...ஜார்ஜ்!
ஓடிப்போயிடுவோம்!
கார் அந்தத திருப்
பத்தில் நிறகிறது!


சபாஷ்... கச்சிதமாக முடிச்சிட்டீங்க! ஏறி உட்காருங்க... சீக்கிரம்
முகமூடியை அகற்றிடலாம் இல்லையா?
தகவல் கிடைத்து போலீஸ் வந்து சேர்ந்தது
நம்பவே முடியலே! ரெண்டு போக்கிரிகள் இந்த விஷமிகளை மடக்கிட்டாங்க!
கொள்ளையடிக்க முயன்றதாக குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள் இவர்கள்.


ஓடிப்போன ரெண்டு பேரும்
தப்பிச்சுக்க முடியாது ..நகர்
முழுக்க சாலைத்தடைகளை ஏற்
பாடு பண்ணியிருக்கிறோம்.


அங்கே—
சாலைத்தடை-எதிரே!
பிரச்னையே அல்ல!
POLICE


என் அடையாள அட்டை!
கர்னல் ஹண்டர்... பிரிட்டிஷ் உளவுப்படை S.I. 6 பிரிவின் தலைவர்
ஸாரி . ஸார் — நீங்கள் போகலாம்!


அவரோடு இருந்தவர்கள் நம் அபிமான இரட்டை வேட்டையர்களாக ஜார்ஜும், ட்ரேக்கும் தான்.
உங்களுடைய பிரதானபணி இனி மேல்தான் தொடங்கப்போகிறது. அந்த வைரநகைக்கடையை யாரோ கொள்ளையடிக்கப்போவதாக முன்கூட்டியே தகவல் கிடைத்தது. கடை உரிமையாளர்களிடம் பேசி நகைகளை நீங்கள் 'திருட' ஏற்பாடு பண்ணினேன். கொள்ளையர்களாக உங்களை இனம் காட்டவே இந்தச் சூழ்ச்சி! 'கொள்ளையர் தீவு' எங்கே இருக்கிறதென்று நீங்கள் கண்டறிய அந்தத் 'தகுதி' உங்களுக்கு அவசியம்.


சீனக்கடல் பிராந்தியத்தில் எங்கோ இருக்கிறது அந்தத் தீவு! உலகின் பலபாகங்களிலும் உள்ள சமூக விரோத கும்பல்களின் சொர்க்க பூமிஅது! சட்டத்தின் பிடிக்கு தபபி கொள்ளையடித்த செல்வங்களை அங்கே இஷ்டபபடி செலவிட்டு உல்லாசமாக வாழ்கிறுர்கள். அந்த தீவு குறிப்பாக எந்த இடத்தில் இருக்கிறது .. அதை யார் நிர்வகிப்பது போன்றதகவல்கள் நமக்குததெரியாது
இப்பொமுது நீங்களும் திருடர்களாகி விட்டீர்கள். இனி அங்கே சென்று உண்மைகளை கண்டறிந்து வர வேண்டும் நீங்கள்!
நீங்கள குறிபபிட்ட மதுபானக்கடை .. அதுதானே கர்னல்?


உங்கள் வெற்றிக்கு என் வாழ்த்துக்கள்!
நன்றி... கர்னல்!
ஒருத்தன் கூட யோக்கியன் இல்லே- இங்கே!
வா... பார்மேனிடம் பேசிப் பார்ப்போம்!


உங்களுக்கு என்ன வேண்டும்?
நாங்க... கொள்ளையர் தீவுக்குப் போகணும்!
கொ...கொள்ளையர் தீவு!- அது எப்படி உங்களுக்குத் தெரியும்?


ஏன் எல்லோரும் இப்படி
தலைதெறிக்க ஓடுகிறார்கள்
மறுகணம் —
நிறையக்கேள்வி
கேட்கிறீங்களே!
ணங்!
ணங்!
ஆ ஆ...!
ஐயோ!


பின்னர் —
இன்னும் ரெண்டு வாளி தண்ணியை கொண்டு வந்து ஊத்துங்க...
எழுந்திருங்கடா, கஸ்மாலங்களா!
சத்!
சத்!


...நாம்... எங்கே ருக்கோம்?
படகு மாதிரி தோணுது!
கரெக்ட்... மிஸ்டர் ஜார்ஜ்!
ஹாங்காங் துறைமுகத்தை விட்டு விலகி போய்க்கிட்டிருக்கோம் — கொள்ளையர் தீவை நோக்கி!


ஆல்ரைட்... நாங்க அங்கேதான் போக விரும்பினோம்!
வைர நகைக் கடையை நாங்க கொள்ளையடிச்ச சேதியை கேள்விப்பட்டிருப்பீங்களே...
ஹே...!எங்கே போச்சு அந்த நகைகள்லாம் .. காணோமே!
அதே கதைதான் இங்கேயும்!


ஆமா... அதை நாங்க தான் எடுத்து பத்திரப் படுத்தி வச்சோம்!
வேண்டாம்! சக திருடர்கள்கிட்டேயிருந்து நாங்க களவாடறதில்லே. எங்களுக்குவேண்டியதெல்லாம் இவற்றை நீங்க சந்தோஷமா செலவிடணும்- கொள்ளையர் தீவிலே! போலீஸ்கிட்டேர்ந்து பாதுகாப்பு ஆடம்பரமான உல்லாச வாழ்க்கை ரெண்டையும் உங்களுக்கு கொடுக்கிறதுக்கு பிரதியா எங்களுக்கு அதிலே ஆதாயம் கெடைச்சுடும்.
நன்றி!


பின்னர்--
உங்களுக்கு என்ன வேணுமோ இஷ்டத்திற்கு வெட்டுங்க...! செலவை உங்க பில்லிலே சேர்த்துக்கொள்வோம்!
அருமை!
என் பெயர் லீ ஸில்வர்! சாப்பிட்டானதும் மேல் தளத்திற்கு வந்து பார்ட்டியிலே கலந்துக்கலாம்..!


அப்போ-நிஜம்தான்னுஉறுதி யாயிட்டுது ட்ரேக்! கயவர் கும்பலுக்குன்னு ஏற்பாடு செய்யப்பட்ட 'ஹாலிடேகாம்ப்' போலிருக்கு... அந்தத் தீவு!
படுஅட்டகாசமா இருக குப்பா...! எனக்குரொம்ப பிடிச்சிருக்கு!
தமாஷ பணறியா!


பின்னர்— மேல்தளத்திற்குச் சென்று மற்ற 'விருந்தாளி'களோடு கலந்து கொண்டு உரையாடினர்...
பாங்க் பெட்டகத்தை ஓட்ச்சேன்
சம்பள பட்டுவாடா பணத்தை பிடுங்கிக் கிணு வந்துட்டேன்!
நமக்குத் தொழில்— கொள்ளை..!


இத்தனை விஷமிகளை ஒரே இடத்தில் இப்படி ஒட்டு மொத்தமா நான் பார்த்ததே இல்லை
இரு போலீஸ்கார னுக்கு இஷ்டமான கனவுக் காட்சி இது!


விரைவில்-
கொள்ளையர் தீவு வந்துவிட்டதுடோய்!


வாருங்கள் நண்பர்களே... நீங்கள் இங்கே கழிக்கும் நாட்கள் இன்பமானதாக அமைய என் வாழ்த்துக்கள்
ஹேற்...ஒரே வஞந்திர மால்ல இருக்கு!


ஏமாத்திட்டான்
என்ன இது...எங்களுக்கு உண்மை தெரிஞ்சாகனும் சில்வர்!
பொறுமை ! என்னோடு அந்த சுரங்கப்பாதையினுள் வாங்க...காட்டுகிறேன்!


என்ன விளையாடறியா?
ஏற்கனவே நான் நெறைய கொலை பண்ணிட்டுவந்திருக்கேன்...சில்வர்!


மடியில்
வ்வாவ...! ஒரு
புள்ளததாககு...!
ஒரு நகரமேல்ல
இருககு...!
விஷமிகளின் நடமாட்
டத்திற்கும் குறைச்ச
லில்லே!
விமானததிலேர்ந்து பார்ததாச
கூட தெரியாம இருக்கததான
இப்படி ஒரு வஞந்திர கூரை..
வெளியுலகத்திலிருந்து மொத
தமாக மறைக்கப்பட்டிருக
கிறது இந்த நகரம்!


கொள்ளையர் தீவின் இருப் பிடம் தெரிந்து விட்டது... வா திரும்பிப் போவோம் ட்ரேக்!
அது...அவ்வளவு சுலபமல்ல,ஜார்ஜ்
அங்கே பார்-- ஆயுதம் தாங் கிய காவலாளி களை!


இங்கேயும் போலீஸார் இருப்பார்கள் என்று நான் கற்பனையாகக்கூட எண்ணிப்பார்க்கவில்லை
இங்கேயும் சில ஒழுங்கு, கட்டுப்பாட்டை நிர்வகிக்க வேண்டியது அவசியமாகிறது!
பேசியவன் லீஸில்வர்..
BANK
உங்கள் கையிருப்பை பாங்க்கில் பத்திரப் படுத்தலாமே!
பாங்க்கா...? இங்கேயா?


திருடிக் கொண்டுவந்த நகைகளை கொடுத்து பணமாக்கிக் கொள்-ளலாம்!
அவ்வப்போது தேவைப-படும்போது பணத்தை எடுத்துக் கொள்ளலாம் நீங்கள்!


சில நிமிடங்களுக்குப்பின் —
அதோ... கேளிக்கைக் கூடம்! போய் இஷ்டம்போல் ஜாலியாக பொழுதுபோக்குங்கள்!
GAMBLING DEN


இங்கிருந்து தப்பி வெளியேற ஒருதிட்டதத்தை சிந்திக்க அவகாசம்தேவை! அதுவரை மற்ற கயவர்களைப்போலவே நடந்து கொள்வதுதான் விவேகம்...
வருகிற 'விருந்தாளி' களை தூண்டி கையிருப்பை முழுவதுமாக செலவழிக்கச் செய்து ஆதாயம்பார்த்துக் கொள்கிறார்கள் போலிருககு
அதையடுத்து—
சே...என் கையிருப்பு காலி!
ஆனால் . என் பக்கம் அதிர்ஷ்டக்காற்று வீசுகிறது ஜார்ஜ்


JACKPOT
ஜாக்பாட்!
க்ளிக்!
தொடாதே! அது எனக்குச்சொந்தம்
ஆவ்வ்...!
சதக்!


போடா...அப்பால்!
கும்!
பகற்கொள்ளையால்ல இருக்கு!
ஆமாம்- அப்படித்தான்- இங்கே எல்லோருமே அயோக்கியர்கள்- நான் கடைந்தெடுத்த அயோக்கியன்- புரிஞ்சுதா?
வீணைக அலட்டிக்காம விலகிப் போயிடுங்க தம்பிகளா...அது தான் உங்களுக்கு நல்லது... இல்லைன்னு கிறுக்கு மாத்யூ உங்களலும்பை நொறுக்கிடுவான்


நான் முந்திக்கொண்டு விடுகிறேன் ..
தப்புக்கணக்கு போட்ட துக்கு தண்டனைடா... அது! இப்போ பார்...
ஐயோ... என் கை எலும்பு முறிஞ்சுட்டா மாதிரி வலிக்குது!
கிறுக்கு மாதயூவை சீண் டிட்டீங்க... உங்க கதை முடிஞ்சமாதிரிதான்!


தொலைஞ்சீங்கடா...!
விலகி ஓடு ட்ரேக!
டமால்!
இனி—மறுபடியும உன்னை கவனிக் கிறேன்...
ஆவ்...வ்!


நிறுத்து... இதை அனுமதிக்க முடியாது!
சண்டைக் களத்திற்கு கொண்டு போவோம்... இவர்களை!


தொலை...!
ஐயோ...!
விடுங்கடா...
என்னை!
அடி... விடாதே...
நொறுக்கு!


உங்க வீர தீரத்தையெல்லாம் அங்கே சண்டைக் களத்திலே காண்பிங்க!
ம்ம், நடங்க!
ஏறுங்க... உள்ளே!
சண்டைக் களமா? என்ன இழவு அது — ஒண்ணும் புரியலியே!


டுத்து —
அதோ...ஸ்டேடியம்! ஏகப்பட்ட கூட்டம் கூடியிருக்கு கவனி!
அவர்கள் நம் பார்வை யாளர்கள்னு தோணுது!
ன் இன்னிக்குத்தான் இங்கே ந்தேன். இந்தநிகழ்ச்சி ஜோரா இருக்குமா...
படு அட்டகாசமா இருக்கும்!
தீவின் சட்ட திட்டங்களை மீறியவர்களிடையே நடக்கும் மோதல்...த்ரில்லிங்காக இருக்கும்!

-2


அடுத்து—
விலகி வழி விடுங்கள்...
மகாராஜாவின்
காப்புபடை வீரா
இவர்கள்
இந்தத் தீவு அவருடைய
இதுவரை அவர் தன்னை
வெளிக்காட்டிக் கொண்
கிடையாது!
அவரை யாரேனும் பார்த்து விட்டால், உடனடி மரணம் தான் தண்டனை என்று கேள்வி!


சண்டை ஆரம்ப மாகட்டும்!


என்ன வகையான ஏற் பாடோ? யூகிக்க இடமே இல்லே!
பங்கேற்கப் போகிற வர்கள் நாம்தான் ட்ரேக்!


இருவரும் அறையிலிருந்துவெளியே கொண்டுவரப்பட்டனர்...
இவற்ருேடுதான் நீங்கள் மோத வேண்டும்!
டிரக்குகள்!


நாம் மூவர்—அவர் கள்இருவர்! பார்த்து விடலாம்!
அவர்களுடைய கதை இன்றோடு முடிந்தது!


ம்ம்...எங்களுக்கு இதெல்லாம் பழக்கமில்லே!
பகைமையை மறந்து நேசத்தோடு அவர்களோடு கை குலுக்கத்தயார்—எங்களை விட்டுவிடுங்கள்...


சண்டை போடுங்கள்..
இல்லையேல் சுடப்படுவீர்கள் இக்கணமே!


வேறு வழியில்லை.. நமக்கு!
நாம் புறப்பட்ட நேரம் சரியில்லை போலிருக்கு



ர்வையாளர்கள் கூட்டம்
பாறுமையிழந்து கத்தியது...
காசு நெறையகொடுத்து டிக்கட் வா கியிருக் கோம்! சீக்கிரம் ஆரம்பி
ஏன் தாமதம்...?
தீவின் உரிமையாளர் திரையிட்ட பல்லக்கினுள் இருந்தார்.
போய் ஏதாவது பண்ணு ஸில்வர்! வாடிக்கையாளர் களை சந்தோஷப்படுத்த வேண்டியதுநம்மகடமை!
இதோ... மகாராஜா


பிரச்னை தீர்ந்தது மகாராஜா...டிரக்குகள் இதோ கிளம்பிவிட்டன!


அடுத்து என்ன நடக்கப்போகிறது என்று ஜார்ஜுக்கு ஒருவேளை தெரியுமோ?
அடுத்து என்ன நடக்கப் போகிறது என்று டரேக்குக்கு ஒருவேளை தெரியுமோ?


டிரென்று ட்ரேக் ஒன்றை
ரிந்து கொண்டான்
வாவ்!
ணங்!


ஏய்ய்ய் . . !
ணங்!


ஹாய்ய்ப்ப்!
டமால்!


இப்போ புரிஞ்சுட்டுது— எல்லாம்!


அபாரம்...!
கதையைமுடி—
சீக்கிரம்...!
விடாதே...மோதி
நொறுக்கு!
வாருங்கள் தோழர்களே
ஒட்டுமொத்தமாக
தாக்குவோம்!
பயல் அப்படியே சட்னி
யாகப் போறான்!


ட்ரேக்குக்கு ஆபத்து... நான் இடையில் புக வேண்டும்!
உச்ச வேகத்தில் டிரக்கை உள்ளே கொண்டுபோனான் ஜார்ஜ் ..
பாய்ந்து தொற்றிக் கொள் ட்ரேக்!
நீதான் உண்மை நண்பன்...!


என் தந்திரம் பலித்துவிட்டது!
நமக்கு முட்டாள் பட்டம் கட்டிவிட்டான்!
க்ராஷ்!


ஏய்ய்...என்கிட்டேயா வாலாட்டறீங்க...
மாத்யூ ஆங்காரத்தோடு கிளம்பிட்டான்...
இத்தோடு தொலைந்தான்கள்!


இப்போ மூன்றுக்கு ஒன்று! பயல்கள் தப்பவே முடியாது
வாங்கடா...தீர்த்துக்கட்டுவோம்!
இந்த மூலையைநோக்கி ஓட்டிவந்தது முட்டாள் தனம்!
எக்கச்சக்கமாக மாட்டிக் கொண்டுவிட்டோம்!



இந்த இக்கட்டிலிருந்து தப்பிக்க ஏதாவது வழி கண்டுபிடி!
ஒண்ணுமே தோண மாட்டேங்குதே!,
வெறியோடு நெருங்கிக் கொண்டிருந்தான் மாத்யூ
டேய்ய்...சுண்டெலிப் பசங்களா இப்போ எமன்கிட்டே உங்களை அனுப்பி வைக்கிறேன் பாருங்கடா!


திடீரென்று-
முகப்பு விளக்கு!
வாட்...!
கண்ணு கூசுது!
எதையுமே பார்க்க முடியலே!


அவர்கள் தடுமாறுகிறார்கள் வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு நழுவி விடுவோம்!


ணங்!
அம்மா!


கயவர் கும்பல் உற்சாக ஆரவாரம் செய்தது
கிறுக்கு மாத்யூவும் அவனது சகாக்களும்கிடைத்த அரிய வாய்ப்பை நழுவ விட்டுவிட்டார்கள்
முட்டாப்பசங்க!
எதிரிங்களுக்கு இப்போ தாக்குவதற்கு ஒரு சான்ஸ் கெடைச்சிருக்கு!


இப்போ பார்-அவன்களுக்கு ஒரு பாடம் கற்பிக்கிறேன்


ஒருத்தன் தொலைஞ்சான்!
ஆஆ!
டமால்!
ஐயோ...செத்தேன்-காப்பாத்துங்க!


டமால்!
ஐயோ!
ரெண்டு!


இன்னும் கிறுக்கு மாத்யூதான் பாக்கி!
நாம அவனை 'கவனிக்கலை'ன்னு கோவிச்சுக்கப்போறான் சீக்கிரம் விடு!


நடப்பவைகளை திரைமறைவிலிருந்து பார்த்து ரசித்துக்கொண்டிருந்தார் மகாராஜா...
அந்த ரெண்டு பசங்களும் அசகாய சூரர்களாக இருப்பான்கள் போலிருக்கு ஆனாலும் இவ்வளவு சீக்கிரத்தில் அவர்கள் வெற்றி பெற்று ஆட்டம் முடிவுக்கு வருவதை நான் விரும்பவில்லை... போய் ஏதாவது பண்ணு ஸில்வர்!
யெஸ் . மாஸ்டர்!


எனவே ..
இதை அள்ளிக்கிட்டுப்போய் கிறுக்குமாத்யூவோட சேர்ந்து கொள்ளுங்கள்!இதுமகாராஜாவின் உத்தரவு!


முரட்டு சம்பட்டிகளை கொடுத்தனுப்பிச்சிருக்காங்களே... இவை எதற்கு?
ஏறி வாங்கடா... நான் சொல்றேன் எதுக்குன்னு!
நேரா படுவேகமா வருகிறானே!
ஊஹூம்... நெருங்க மாட்டான்!


நேரடி மோதல் ஏற்பட்டா அவனுடைய டிரக்கும் அப்பளமாகிப் போயிடுமே.
ஆனாலும் கிட்டே வந்துட்டானே...


நாம அப்படியே நிற்போம் கடைசி தருணத்தில் வண்டியை ஒடிச்சிவிலகிப் போயிடுவான் பார்..
வந்துட்டான்...!


கிறுக்கன்னு பேர் வச்சவங்க சும்மா வைக்கலே!
க்ராஷ்!
சம்மட்டியையெடுத்துக் கிட்டுவாங்கடா!


இது நியாய மில்லை...!
வா...சீக்கிரம் இறங்கி ஓடிப்போயிடுவோம்!


அதற்கு அவகாசம் இருக்கவில்லை...
முதலில் டிரக்கை நொறுக்கிட்டு பிறகு உங்க மண்டையை குறிவைக்கிறேன்!
வெளியேற நெனைச்சீங்களோ ஒரே போடா போட்டிடுவேன் — மண்டையிலே!
டங்!
விசிலடித்து ஆரவாரம் பண்ணியது கூட்டம்...
அந்த பசங்க ரெண்டு பேரும் கோவிந்தா!
டங்!
ச்சொ... பாவம்!
பயத்திலே உயிரை விட்டுடப் போறுங்க


எஞ்சினை இயக்க முடிந் தால்... நமக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கலாம்!
செய்வது எதுவானாலும் சீக்கிரமாகச் செய்!
நம்பமுடியாத அதிசயமாக...
ஆகா...எஞ்சின் ஸ்டார்ட் ஆகி விட்டது
ஹே!


ஆ ஆ..!
ரெண்டு பேரை விழப்பண்ணி யாச்சு!
ஐயோ!


கிறுக்கு மாத்யூ மட்டும்தான் பாக்கி
எஞ்சினை நொறுக்கப் போறேன்... அப்புறம் என்ன செய்வீங்களாம்!


அதுதான் நடக்
காதுன்னேன்...
ஈஈஈ...!
டமால்
ஊய்ய்ய்ய்...


திரைச்சீலையை விலக்கிக்கொண்டு உள்ளே பாய்ந்தான் மாத்யூ...
ஹே... மகாராஜா!
முட்டாள்என் முகத்தை பார்த்து விட்டாய் நீ.. இதற்கு தண்டனை ஒன்றே ஒன்றுதான்.. ஸில்வர்இவனைக்கவனி
ஆம்...மரண தண்டனை
டமீல்!


போட்டியில் வென்று விட்டீர்கள் ... நீங்கள் விடுதலை செய்யப் பட்டிருக்கிறீர்கள் ...
நன்றி . . !


சீக்கிரமாக இங்கிருந்து வெளியேறி விலகிப் போய்விட வேண்டும்!
ஹே எ ... என்ன செய்யப்போகிறாய்?


மெயின் ரோட்டில் தலைதெறிக்கும் வேகத்தில் டிரக் பறந்தது
டமால்!
இந்தத்தீவில் இனி ஒரு கணம்கூட நிற்கக் கூடாது!


நேராக வனந்தர பகுதிக்குசென்று அங்கே தலைமறை, வாகிவிடுவோம்
சரி! பிறகு தப்பிச் செல்லும் வழியை யோசிப்போம்!


அதையடுத்து —
டீசல் தீர்ந்து போச்சு வா- ஓடுவோம்!
இனி நம்மை தடுத்து நிறுத்த எவனும் முடியாது!


அப்போது—
அவர்கள் ஏன் அப்படி ஒரே ஓட்டமா ஓடினாங்க ஏதோவிஷயம் இருக்கு
நம் காவலர்கள் அவர்களை விரட்டிப் பிடிச்சிடுவாங்க... மாஸ்டர்!
பிடிக்கட்டும்...!வேறொரு அதிர்ச்சி கொடுக்க திட்டமிட்டிருக்கிறேன்...!


இதற்கிடையே, அவர்கள் ஓட்டிவந்த
ட்ரக் நடு சாலையில் கைவிடப்பட்டு
நிற்பதை காவலாளிகள் கண்டனர்.
கடற்கரையை நோக்கித் தான் அவர்கள் ஓடிக் கொண்டிருக்கக்கூடும்.. வாருங்கள் பின் தொடர்வோம்!
ற்று நேரம்
ழித்து...
கடற்கரை எங்கே? கண்ணில் பட மாட்டேனென்கிறதே
காரணம் . புரிகிறது! இந்த வெட்டுண்ட மரத்தை நாம் ஏற்கனவேபார்த்திருக்கிறோம்!


ஆமாம்...சே –
வழி தெரியாமல் சுற்றிச்சுற்றி வந் திருக்கிறோம் ...


கொஞ்சம் பொறு...


இந்த யோசனை ஏன்
நமக்கு முன் பே
தோன்றவில்லை!


இந்த வழியாகப்
போகணும்...!
சீக்கிரம் ஓடு...! காவ
லர்கள் துரத்திக்
கொண்டுவருகிறார்கள்


அவர்கள் வெகு தொலைவு போய் விட முடியாது..!
சுடாதே...! அவர்களை உயிரோடு பிடிக்க உத்தரவு!


ஐயோ... வேலி!
ஏறிக் குதித்தால் போயிற்று!


க்ராக்!
ஆஆஆ...!


லேசான மின்னோட்டம்... யாரும் ஏறிக் குதிப்பதை தவிர்க்க இந்த ஏற்பாடு போலும்
மாட்டிக்கொண்டு விட்டோம்!


ஆம்...இனி தப்பவே முடி-யாது- நீங்கள்!
உங்களிடம் மகாராஜா சில கேள்விகள் கேட்க பிரியப்படுகிருர்...!
ஏன் இப்படி ஓட்டம் பிடித்தீர்கள்என்றறிய ஆவலாகஇருக்கிருர்
எந்த குற்றவாளியும் இது வரை இம் மாதிரி முயற் சியை மேற்கொண்டதில்லை!


பட்!
கேள்விகளுக்குபதில்சொல்லிக் கொண்டு நிற்க எங்களுக்கு அவகாசம் இல்லை . . ! எனவே..
பட்!


எங்களைப்பற்றிய உண்மையை மகாராஜா நிச்சயம் தெரிந்து கொள்வார்... ஆனால் இப் போது அல்ல—
கும்!
ஆ...வவ்!


வேலியில் வழி ஏற் படுத்த இது உதவும்...
காவலாளிகளுக்கு நன்றி...
ரட்-டட்-டீ
நீந்தி அருகாமையிலுள்ள இன்னொரு தீவுக்கு சென்று விட்டோமேயானால், மிதவை ஒன்றை தயாரித்து ..
ஊஹும்... நிலவரம் வேறுமாதிரிஉள்ளது... ட்ரேக்!


ரொம்ப உசரம்...
குதிக்க முடியாது!
போதாக்குறைக்கு கீழே குத்துப்பாறைகள் தலை நீட்டிக்கொண்டிருக்கின்றன


முட்டாள்களே...! கொள்ளையர் தீவிலிருந்து தப்பிவெளியேறுவது அத்தனை சுலபமல்ல...!
அ..ம்...மா!
ணங்!
ஊப்ப்ப் ..!


நீண்ட நேரத்திற்குப்பின்... அவ் விருவரும் சுயவுணர்வு திரும்ப வரப்பெற்றபோது-
ஏதோ... அரண்மனை மாதிரி இருக்கு!
தீவின் உரிமையாளருடைய இடம்...அதோ அவருடைய மூடுபல்லக்கு!


வாருங்கள்! ஆனால் உங்களுக்குநான் நல்வரவு கூறப்போவதில்லை.... ஏனெனில்-மரணதண்டனை உங்களை எதிர்நோக்கியிருக்கிறது!


ஏன் ஓடினீர்கள்...? எங்களிடமிருந்து அப்படி எதை ஒளிக்க முயற்சிக்கிறீர்கள்?
சொல்லுங்கள் ! மரணம் நிச்சயம்என்றானபின் உண்மையை வெளியிட்டால் தப்பில்லை!


குற்றவாளிகளுக்கு இதுசொர்க்க பூமி! போலீஸ்தொல்லைகிடையாது கையிலிருக்கிறதை இஷ்டப்படி செலவழித்துக்கொண்டுஜாலியாக இருக்கவேண்டியதுதானே!
CAMBLING
இப்படி நெறிகெட்ட வாழ்க்கை எங்களுக்கு அலுத்துப்போச்சு!
அதனால் எங்களுக்கு இங்கே இருக்கப் பிடிக்கவில்லை! அதான்


உண்மை என்னவென்று நான் சொல்லட்டுமா...! அரசு அதிகாரிகளால் அனுப்பிவைக்கப்பட்ட உளவாளிகள் நீங்கள்! ஆனல் இப்போது என் கைதிகள்!


உன்னிடம் நாங்கள் ஒரு கேள்வி கேட்க பிரியப்படுகிறோம்...!ஏனிந்த மூடுமந்திரம்!
ஏன் நீ ஒளிந்து திரிகிறுய் !


அட...!
முட்டாள்கள்! நீங்கள் இந்த விஷமத்தை செய்வீர்கள் என்று எதிர்பார்த்தேன்! ஏய்...யாரங்கே?
அதிர்ஷ்டசாலிகள் நீங்கள்! மகாராஜாவின் முகத்தை நீங்கள் பார்த்திருந்தால் மறுகணமே பிணமாகிப் போயிருப்பீர்கள்!
கொண்டுபோய் சிறையில் அடையுங்கள் இவர்களை!


படு ஆபத்தான விளையாட்டில் இவர்களை பங்கேற்க வைத்து நம் மற்ற வாடிக்கையாளர்களை உற்சாகப்படுத்துவோம்!
நடங்கடா...!
அடுத்து...
சைத்தானே உள்ளே போன்னு சொன்னா போகமாட்டோமா... என்ன?
வைக்கோல்லாம் பரப்பி யிருக்காங்க-கொஞ்சம் ஈரம் இருக்கு கிராதகர்கள் நெஞ்சிலே!



காய்ஞ்சுபோன ரொட்டித் துண்டும் தண்ணீரும்... ரொம்ப தாராளமனசுதான்!
இந்த மட்டோடு விட்டானுகளே!



ஊஹூம்...ட்ரேக் அவசரப்பட்டு அப்படி சொல்லி விட்டான
ஹே . !அந்தச்சுவர் நகருகிற மாதிரி இல்லே?
ஆமா...!


என்னதான் நடக்குது இங்கே?
இது 'மரணப் பூங்கா'! இதை கடக்கும்போது பல வகை மரண அபாயங்களை சமாளிக்க விழிப்போடிருங்கள்...
தலைவனின் குரல்! ஒலிபெருக்கி எங்கோ மறைவான இடத்தில் இருக்கிறது!


மகாராஜாவின் மாளிகையில் ..
கொள்ளையர் தீவிலுள்ள என் மற்றைய 'விருந்தாளி'களுக்கு வேடிக்கை காட்டப்போகிறீர்கள் சீக்கிரமே உயிரைவிட்டு ஆட்டத்தை கெடுத்துவிடாதீங்க!
ஓர் அரங்கத்தில் —
ரொம்ப தமாஷா இருக்கும்!
எனக்கு ரொம்ப பிடிச்ச அயிட்டம்!
'மரணப் பூங்காவை யாரும் கடந்ததாக இது வரைசரித்திரமே இல்லே!
பசங்க.. பாவம்!


ஐயோ.. ராட்சஸ தேள்கள்!


கொட்டினால் போச்சு — உடனடி மரணம் உறுதி! பின்னுக்கு நகர்ந்து...


இருவரும் அதள பாதாளத்தில் விழுந்தனர்...
ஒரு எலும்புகூட மிஞ்சாது!
ஆ ஆ ஆ...!


ஆனால் —
ஹே...! ஆச்சரியமா இருக்கே...! தரை—மெத்தென்று இருக்கிறதே எப்படி?
நுரை ரப்பர்...!
பொத்!


ஆமாம்,.. அவ்வளவு சீக்கிரத்தில் நீங்கள் செத்துப் போவதை நான் விரும்பவில்லை! இனிமேல்தான் விபரீதங்கள் முளைவிடப் போகின்றன...
மீண்டும் அந்த சைத்தானின் குரல்... இங்கே எல்லா இடங்களிலும் ஒலிபெருக்கி அமைப்பு உள்ளது போலும்!


நீங்கள் ஓடத்தொடங்குவது நல்லது... ஏன் நான இப்படி சொல்கிறேன் என்று சற்று திரும்பி பார்த்தீர்களானால் புரியும்!


ரெண்டு முரடர்கள் —
கையில்விசை ரம்பத்தோடு
ஓடு !


கால்வாய் ஒன்று குறுக்கிடுகிறது!... நீந்திக் கடப்போம்!
பொறு...!புகை வருகிறதே ஏன்?


அது .. நீர்
அல்ல —
அமிலம்!
சண்டாளர்கள்! வா...
வேறு திசையில்
ஓடுவோம்!


ஆனால் —


ஹேய்... ஜாக்கிரதை-
மரத்தை அறுத்து நம்
மீதுவிழச்செய்கிறார்கள்
டொம்!
இப்படி.... வா!


யாவ்வ்!
திரும்பி ஓடு!


ஊஹூம்... மாட்டிக் கொண்டோம்!
மரங்களையே அறுத்து அலுத்துப் போச்சு...! அதனாலே...
இனி – உங்களை குறிவைக்கப் போறோம்!


அங்கே நடப்பதை தீவிலிருந்தவர்கள் டி.வி. திரையில் கண்டு களித்துக் கொண்டிருந்தனர்...
மனித உடலை இரம்பம் கூறுபோடுகிற காட்சி... படு த்ரில்லிங்காக இருக்கும்!
பயல்களோட மூஞ்சியிலே மரணகளை வந்திட்டுது பார்!
தப்பிக்கவே முடியாது!


மனம் தளராதே ட்ரேக்... தம் பிடித்து தள்ளு!
இதோ !


அம்மாடி...
உருள்கிறது இது!


ஆவ்வ்...!
ஐயோ —
அமி .....லம்!


ஈஈஈக்க...!
செ...த்...தே...ன்...
இனி—இந்த மரத்தையே பாலமாக போடுவோம்!
அமில கால்வாயை கடக்க இது நல்ல யுக்தி!


உங்கள் சாதனை பாராட்டுக்குரியது! ஆனால் இதைவிட இன்னும்படு பயங்கர அனுபவம் காத்திருக்கிறது உங்களுக்கு!


ஆம்...அதைப்பற்றிய சந்தேகமே வேண்டாம் உங்களுக்கு!


எந்த இடத்தில் என்ன விபரீதம் காத்திருக்கி றதோ...நமக்கு
ஆம் கணப்பொழுதும் இங்கே தாமதிக்கலா காது.... வா ஓடிப் போய்விடுவோம்!


ஆ ஆவ்வ...!
எப்படியாவது உன்னை உடனடியாக விடுவிப்பேன்...
ஆனால் அதற்கான அவகாசம் உனக்கில்லை... ஜார்ஜ்!


தன் அரண்மனையிலிருந்து கொண்டு ரேடியோ மூலம் பேசினார் மன்னர்... இங்கேயுள்ள விஷமத்தனமான பொறிகளை இயக்குபவரும் அவரே.
ஏனென்றால் .. முதலில் உன்னை காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நெருக்கடியில் இருக்கிறாய் நீ
இதோ...


க்ர்ர்ர்...!
கருஞ்சிறுத்தை.. !
ஆ ஆ...!


ஐயோ...செத்தேன்!


அது என் குரல்வளையை பிடிக்குமுன் நான் முந்திக்கொண்டதால் பிழைத்தேன்!
சனியனே... போய்த் தொலை!


எனக்கு எழுந்து நிற்கக்கூட உயிரில்லை! சனியன் திரும்பவும் பாயப் போகிறது!
அந்த ஜீவமரணப் போராட்டம் மற்ற வாடிக்கையாளர்களுக்கு கேளிக்கையாக டி.வி.யில் காட்டப்பட்டது...
அந்தப் பயல் ஜார்ஜ் இத்தோடு காலி...
AGAIN
அந்த சைத்தானை சமாளிக்க அவனால் முடியாது.
நார்நாராக கிழித்துப் போடப் போகிறது—அருமையான காட் தான்... இல்லையா! ஹா...ஹா.


இதற்கிடையே ட்ரேக் தன்னை விடுவித்துக் கொள்ள ஒரு யுக்தியை கையாண்டு கொண்டிருந்தான்!
இதை ஊஞ்சல் போல் ஆடச் செய்து...
நீட்டிக் கொண்டிருக்கும் ஒடிந்த கிளையில் கயிற்றை உராயச் செய்தால் அதன் கூரிய முனை கயிற்றை அறுத்து விடக்கூடும்!


ஜார்ஜ் மீது சிறுத்தை மீண்டும் பாய்ந்த கணத்தில் —
பொத்!
ஒழிந்து போ. பிசாசே!
படீ!


என்ன மன்னரே? இப்போதாவது திருப்தியா?
இம்முறை வெற்றி பெற்றது நாங்கள்தான்!
ஒப்புக் கொள்கிறேன்..
ஆனால் மொத்த விளையாட்டில் இது ஒரு அங்கம்—அவ்வளவுதான்...!சரி...அடுத்த கட்டத்திற்கு போவோமா?


எச்சரிக்கைக்கு நன்றி... எதிரே மின் வயர்கள் ஊடுருவிச் செல் வதை கண்டு பிடித்துக் விட்டோம்.
இந்த குச்சியால் கிளறி ஆராய்வோம்
வயரை இழுத்ததும் ஏதாவது ஒரு பொறி இயக்கம் பெறும் வகையில் அமைக்கப் பட்டிருக்கலாம்!
அப்படி ஒன்றும் காணோமே!


பொறு... காலுக்கடியில் தரை நழுவுவதுபோல் இருக்கிறது.
இதுதான்— அந்தப் பொறி!
ஐயோ... பெரிய பள்ளம்!
தொலைந்தோம்!


ஐய்...யோ!
என் காலைப பிடித்து கொள் — சீக்கிரம்!
மேல் விளிம்பை பற்றி கொண்டிருக்கிறேன் நான்...
கீழே...படு பயங்கரம்!


முடிவில் ஒருவாருக வெளியே தலை நீட்டிய போது
கொண்டு விட்டீர்கள்— சபாஷ்... உங்களுடையு சமயோசித ஆற்றல் என்னை வியக்க வைக்கிறது!
நானும் லேசுப்பட்டவனில்லை! உங்களுக்கு பிரச்னை இத்தோடு தீர்ந்து போய்விடவில்லை தம்பிகளா!


கடைசி பிரார்த்தனையை
சொல்லிக் கொள்ளுங்கள்!


ழே குத்தீட்டிகள்... மேலே ராட்சஸ ாங்க்...! என்ன செய் ப் போகிறோம் ஜார்ஜ்
அதை நீ சொல்வாய் என்று நான் நினைத்தேன்!
அந்த டாங்க் குழியின் மேலே கடந்து சென்றது...
ஆக... ஈட்டிகள்மீது விழுந்து சாகத் தீர்மானித்து விட்டார்கள் போலிருக்கிறது... மரணம் அவர்களைத் தழுவும் அழகை நான் காண வாய்ப்பில்லாமல் போய் விட்டதே...சே!


ஆனால் ..
குழி அதிக அகலம் இல் லாமல் இருப்பதால் நம்மை காப்பாற்றி விட்டது!
நாம் செத்துப் போயி ருப்போம் என்று அந்த அரக்கன் முடிவு கட்டியிருப்பான்!
இனி... அந்த டாங்கை கவனிப்போம்!
மூடியைத் திறந்து உள்ளே இருப்பவர்கள் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்வோம்


ஙே... யாரையும் காணோமே- உள்ளே!
ரிமோட் கண்ட்ரோலாக இருக்கும்!
இந்த வயர்களை பிடுங்கி விட்டால் போதும்!
இனி, இந்த டாங்க் நமக்கே சொந்தம்!
இயந்திர துப்பாக்கிகள் நம்மை குறிவைத்து முழங்குகின்றன...
ஆனால் ஒரு ஆச்சரியத்தை கவனித்தாயோ?
ரட்-டட்


தோட்டாச்கள் டாங்கை தொட்டதும் தெறித்து விலகுகின்றன! பார் நமக்கு எந்த ஆபத்தும் இல்லை!


ஓ அடுத்து — வெடி குண்டு பிரதேசமா?


ஆனால் நமக்கு எந்த ஆபத்தும் ஏற்படப்போவதில்லை


இப்படி நாம் டாங்க்கில் ஏறிக் கொண்டு விடுவோம் என்று எதிர்பார்த்திருக்க மாட்டார் கள்
டாங்க்கினுள் நாம்இருக்கும் வரை வேறு எந்தப் பொறி யும் நம்மை எதுவும் செய்ய முடியாது


தீவிலிருந்த மற்ற குற்றவாளிகள் அந்தக் காட்சியை டிவி திரையில் கண்டு களித்துக்கொண்டிருந்தனர்
அதை கடத்திக்கிட்டு போகிறார்கள்.
இனி... சுவாரஸ்யமாக இராது
இப்படி காசைக் கரியாக்கி நேரத்தை வீணடிக்கவா இங்கே வந்தேன்—சே...!
ஒரேயடியா போரடிக்க ஆரம்பிச்சுட்டுது!


தோன்றுகிறார்...கவனி
ஸாரி...தோழர்களே எதிர் பாராத திருப்பம் ஏற்பட்டு விட்டது ..
ஆனால்...பொறுமையோடு காத் திருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்—பாருங்களேன் இன்னும் ஓரிரு நிமிடங்களில் அங்கேஎன்ன நடக்கப்போகிறது என்று!


எதிரே இருந்த ஆப்த்தை அறியாமல் தொடர்ந்து டாங்க்க செலுத்திச் சென் றனர் ஜார்ஜும், ட்ரேக்கும்
ஆ...வ்! புதை மணல்!
டாங்க் மூழ்குகிறது...நாம் உடனடியாக வெளியேற வேண்டும்!


டாங்க்கிலிருந்து குதித்தாலும் புதை மணல் பரப்பில்தான் குதிக்க வேண்டியிருக்கும்...!


அங்கே மன்னர் வெற்றிக் களிப் பில் இருந்தார்...
ஹா...ஹா! இம்முறை பயல்கள் தப்பவே முடியாது!


டாங்க் செங்குத்தாக
கீழிறங்குகிறது...ஆனல்
என்ன பிரயோஜனம்!
இந்த சங்கிலிகள்
..! ஆகா!


ஏய்... ஜார்ஜ் - நீயும்
ஒன்றை பற்றிக்கொள்..!
எதற்கு?


இப்படி ஊஞ்சலாடி வேகம் எடுத்து —
...ம்ம்...புரிகிறது —
ம்ம் -- குதி!


இதோ!


அதை டி.வி. திரையில் பார்த்துக்கொண்டிருந்த மற்ற குற்றவாளிகள் உற்சாக ஆரவாரம் செய்தனர்.
ஜமாய்ச்சுட்டானுக
வாவ்....! என்ன ஒரு மதியூகம்!
பயல்கள் சரியான கில்லாடிகள்!


அரசர் மீண்டும் திரையில் தோன்றினர்
நிகழ்ச்சி மீண்டும் சூடு பிடித்து விட்டது...நீங்கள் பெரிதும் ரசிக்கும் வகையில் அமைந்த இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்துஇன்னும் பல அரிய காட்சிகள் வர இருக்கின்றன!
இதோ...இந்த பட்டனை நான் அழுத்தியதும்...


...பயங்கர ஓநாய்கள் கூண்டிலிருந்து வெளி யேறி அவர்களை நோக்கி விரைகின்றன பாருங்கள்
சந்தடிகேட்டு ஜார்ஜும் ட்ரேக் கும் திரும்பிப் பார்த்தனர்
பலநாட்கள் பட்டினி கிடந்த ஓநாய்கள் அவர்களை கடித் குதறுவது உறுதி.
வா...ஜார்ஜ்— ஓட்டம் பிடிப்போம்


உங்களுக்குஒருசிறு உதவிசெய்ய நினைக்கிறேன். அதோ உங்களுக்கு எதிரே ஒரு குகை இருக்கிறது பாருங்கள்.
நன்றி!


அதன் உள்ளே போய்விட்டீர்கள் என்றால் தப்பித்துக் கொண்டு விடலாம் — ஓநாய்களிடமிருந்து!
அஹ்..ஹ்..ஹ்..!


ஆங்... அப்படித்தான்-- எனக்கும் தெரியும் நீங்கள் சமர்த்து என்று!
பாராட்டுக்கு நன்றி...


ஆனால் வெறிகொண்ட ஓநாய்களும் உள்ளே வந்துவிடுமே...
ஆமாம்.. எக்கச்சக்கமாக மாட்டிக்கொண்டு விட்டோம்!


ணங்!
நான் உங்களை காப்பாற்றி விட்டேன்!
ஆனால்.. காரண மில்லாமல் அதை செய்ய மாட்டாயே!


மூன்று குகைப்பாதைகள்...! இதில் ஏதோ ஒன்று பத்திரமான வழியாக இருக்கக் கூடும்...
மற்ற இரண்டிலும் ஆபத்து நம்மை எதிர்நோக்கிக் காத்திருக்கலாம்!
என்னை சரியாகவே புரிந்து வைத்திருக்கிறீர்கள்! ஆமாம் உங்களை குகைக்குள்ளே தள்ளவே இந்த ஏற்பாடு!


ஆமாம்... ஆனால் எது சரியானது என்று தேர்ந்தெடுக்க வேண்டிய பொறுப்பு உங்களுடையது...


இதுவரை எப்படியோ தப்பி விட்டார்கள்... ஆனால் இம்முறை அவ்வளவு சுலபமல்ல!
உள்ளே அபபடி என்ன விவகாரம் இருக்கிறதோ தெரியவில்லை!
அந்த ஆபத்து படுபயங்கர மானதொன்றுகததான் இருக்கும்என்பதில்சந்தேகமேயில்லை


உள்ளே தீவட்டிகள் கொளுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன... ஆபத்தை கண்டு கொள்ளவும் எதிர்த்து போராடவும், உங்களுக்கு இந்த வெளிச்சம் தேவைப்படும்...
கேட்டாயல்லவா...
...ஆனால் நாம் எப்படி சரியான குகையை தேர்வு செய்வது?
கண்டுபிடிக்க வழியில்லை. பேசாமல் நமக்கு அருகே உள்ள குகைக்குள் நுழைவோம்- ஆண்டவனை வேண்டிக்கொண்டு!



நாம் சர்வ ஜாக்கிரதை யாக இருக்க வேண்டும்
சற்று தொலைவு சென்றதும்
க்ரீக்!
என்ன அது.... சப்தம்?
—நமக்குப் பின்னால்


அதள பாதாளம்...
தரைதென்படவே
யில்லை!
விழுந்திருந்தோமேயானால்
நம் பிணம் கூட அகப்
பட்டிராது!
நம்மை விழுங்கி ஏப்ப


அப்போது —
அங்கே பார்...
மறுபடியும் —
...நச்சுப் பாம்புகள்!


பள்ளத்தின் சுவர்களில் உள்ள பொந்துகளுக்குள்ளிருந்து சீறிக்கொண்டு வருகின்றன..
நாம் உள்ளே விழுந்திருந்தால் இவை நம்மை பதம் பார்த்திருக்கக்கூடும்
அவர்கள். முன்னேறி நடந்தார்கள்
அடுத்து என்ன நிகழுமோ...?
...யாருக்குத் தெரியும்!


அதன்பின் —
குகை இங்கே முடிவ டைகிறதோ!
இல்லை — இந்தப்பாறை வழியை அடைத்துக் கொண்டிருக்கிறது!
நகர்த்த முடியுமோ என்னவோ...!
நகர்த்தித்தான் ஆ
வேண்டும்! வேறுவ


ஹே...ஹே – நீங்கள் தப்புபண்ணிவிட்டீர்கள்!
அந்தப் பாறையில் விஷமம் இருக்கிறது
ஐயோ...அது நம்மை நோக்கி உருளுகிறது


பிடி... ஓட்டம்!
விரட்டிக்கொண்டு வருகிறது...!
நம் வேகத்திற்கு அதனால் ஈடுகொடுக்க முடியவில்லை
கால் தடுக்கி விழுந்து விடாதே- ஜாக்கிரதை!


இந்தப் பாறையிடமிருந்து தப்பி அங்கே நச்சுப்பாம்பு களிடம் அகப்பட்டுக் கொள்ளப்போகிறோம்
சரி...பேசிக்கொண்டிராதே...தொடர்ந்து ஓடு!
இவைகளை எப்படி சமாளிப்பது...?


தீவட்டிகள் நமக்கு உதவக்கூடும்!
ஆமாம்... அருமை யான யோசனை!
மிரண்டு பின் வாங்குகின்றன


ஒரு பிரச்னை தீர்ந்தது... ஆனால் இன்னும் ஒன்றைநாம் சமா ளித்தாக வேண்டுமே
அருமையான ஐடியா ஒன்று இருக்கிறது ஏறிக்கொள் என் தோள் மீது—சொல்கிறேன்!
உயரம் கூடுதலாக இருந்தால்...


...அதிக தூரம் தாண்ட முடியும்!
என்னை பிடிக்க ரெடியாக இரு...
வாஸ்தவம்தான்! ஆனல் — நீ ...?


..பிடித்து விட்டேன்
—உன்னை!


இடையில் ஏற்பட்ட தாமதத்
தினுல் பாறை நம்மை
நெருங்கி விட்டது பார்...
தப்பிக்கவே
முடியாது!


டி.வி. திரையில் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த குற்றவாளிகளுக்கு ஏகப் பட்ட உற்சாகம்...
பள்ளத்தைக் காட்டிலும் அது உருவத்தில் பெரி யது.எனவே மாட்டிக் கொண்டுவிட்டது!
சட்னியாகப் போகிறான்கள்
ஆனால் —
படா...தமாஷ்!
அட...!
ஹே...!
தப்பிச்சுக் கிட்டானுங்களே!


சுவரில் சிறிதளவு பள்ளம் இருந்ததால் பிழைத்தோம்!
அதிர்ஷ்டம் இன்னமும் நம்மை கைவிட்டுவிடவில்லை!
க்ராஷ்!
இந்தத் தடவையும் நாம்தான் ஜெயித்தோம்!
வா... குகையின் நுழை வாயிலுக்கே திரும்பிச் செல்வோம்


அங்கே மன்னரின் மாளிகையில் —
அடேய்...கேலிச் சிரிப்பா சிரிக்கிறீர்கள்
இன்னும் நான் தோற்று விடவில்லையடா....!


இன்னும்இரண்டு குகைகள்பாக்கி ஒன்று பத்திரமான வழி...இன்னொன்று—வேறுவிதமான அபாயங்கள் உள்ளது
ஆக... மறுபடியும் ஒத்தையா ரெட்டையா விவகாரமா?
என்னைக்கேட்டால் நடுவில் உள்ள குகை வழியாகச் செல்லுங்கள் என்பேன்...
ஓகோ...அப்படியா? எனவே—


நாங்கள் மூன்ருவது குகை வழியசக செல்லப்போகிரேும்!
ஹீ...ஹீ...எனக்குத் தெரியும்--என்பேச்சை நீங்கள் கேட்கமாட்டீர்கள் என்று!


நீங்கள் மனதை மாற்றிக் கொள்ள இனி அவகாசமும்கிடையாது—
புஸ்ஸ்ஸ்...!
ஓ...தண்ணீர்—குகையை நிரப்பத் தொடங்குகிறது!


ஐயோ...!
ஆ ஆ...!


வெள்ள நீர் அவர்களை அடித்துக் கொண்டு போனது!
நீந்த முயற்சிப்பதால் பயனேதும் இருக்கப் போவதில்லை!
நீரோட்டத்தின் போக
லேயே செல்வதுதான் விவேகம்
அடுத்து...
நாம் தொலைந் தோம்-இத்தோடு!
அந்தச் சுவற்றில்போய் முட்டிக்கொள்ளப் போகிறோம்


இறுக்கமாக பிடித்துக்கொள்..
அப்படியே... தாக்குப்பிடி!
அம்மாடி..


அப்படியே மெள்ள கரை யேறப் பார்ப்போம்!
நம்இந்த சாதனையை மன்னர் பார்க்கத் தவறியிருக்க மாட்டார் — இல்லையா..?
தவறவில்லை..! கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன்! உங்களுடைய சாகஸத் திற மையை பாராட்டி சபாஷ் சொல்லத் தோன்றுகிறது!
இதில் ஒன்றும் குறைச்சலில்லை


அந்த் குகை உங்களுக்கு இடப்புறமாகப் போகிறது...
அந்த வழியாக நீங் கள் போகலாமே!
என் பேச்சைக் கேட் பீர்கள் என்று எதிர் பார்த்தேன்
ஏன் அப்படி போகணும் வெள்ளம்தான் வேக மிழந்துவிட்டதே திரும்பி நீந்தி போய்விடலாம்!


ராட்சஸ வெளவால் கள்...
நூற்றுக் கணக்கில்!
குகை வழியாக ஓடவேண் டிய நிர்ப்பந்தத்தை ஏற் படுத்தி விட்டனவே...


அந்த வெளவால்களிடம் அகப்பட்டால் குதறி எடுத்துவிடுமே!
திரும்பிப் போகவும் முடியாது... இங்கே நிற்கவும் முடியாது.
குகைவழியே செல்வோம்!
சரி வா —


அப்போது—
அம்மாடியோவ்!
இவ்வழியாக சென்றவர்களின் மிச்சம் போலிருக்கு!
இங்கே அப்படி என்ன தான் ஆச்சு அவர்களுக்கு?


திடீரென்று—
ஐயோ...என் கால்—
என்ன ஆயிற்று?
ஐயோ...எனக்கும் அதே கதிதான்!
பொறியில் மாட்டிக் கொண்டுவிட்டோமே!
லேசில் விடுபடமுடி யாது போலிருக்கே!
இப்போ என்ன செய்வது?


இதிலிருந்து தப்பியுங்கள் பார்க்கலாம்!


இதற்கு அவர்கள் எப்படி
பதில்சொல்லப்போகிறார்களோ
ஆபத்து—
தலைக்குமேலே...!
யோசிக்க அவ
காசம் இல்லை!


மாட்டிக்கிட
டீங்களா...?


இல்லை ..!நிச்சய மாக இல்லை...!
என்ன செய்யறே ...ட்ரேக்?
இன்னும் எவ்வளவு நேரத்திற்கோ?


இப்போது நீங்கள் மூன்றாவது குகையினுள் பிரவேசித்திருக் கிறீர்கள்
இதுபாதுகாப்பான வழி—இல்லையா?
அது நிஜமோ, பொய்யோ— இனிமேல்தான் தெரியும்!
